**வீரகெட்டிய பிரதேச சபை - 2020**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வீரகெட்டிய பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, தங்கல்ல பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தா்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய

முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,
- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(i)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது ரூபா 603,152 தொகைக்கான மூலதனச் செலவுகள் மீண்டுவரும் செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரியாக செலவுகளை இனங்கண்டு கணக்கீடு செய்வேன். | செலவுகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்குரிய பெற வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 9,382,490 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | மதிப்பீட்டு பெறுமதியை மாத்திரம் ஆண்டிற்கான பெற வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் என கணக்கீடு செய்தேன். | வருமானத்தை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்வேன். |
| (இ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய கடன் மீதி ரூபா 8,737,611 தொகை எனினும், அதனை ரூபா 8,494,923 தொகை என ரூபா 242,688 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரி செய்வேன். | பொறுப்புக்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2021 ஆண்டிற்காக உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய கடன் தவணைகளின் கூட்டுப் பெறுமதி ஆகிய ரூபா 2,647,511 தொகை நடைமுறை பொறுப்புக்கள் என கீழ் நிதி நிலைமைக் கூற்றில் காட்டியிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரியாக கணக்கீடு செய்வேன். | பொறுப்புக்கள் சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (உ) | 2018 ஆம் ஆண்டின் போது 4 கடையறைகளை வாடகைக்கு கொடுத்ததன் மூலம் பெற வேண்டிய ரூபா 1,340,000 இற்கான ஒரே தடவையில் பெறக் கூடிய தொகையினை மீளாய்வாண்டு இறுதி வரை கணக்கீடு செய்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் கணக்கீடு செய்வேன். | பெற வேண்டிய வருமானத்தை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஊ) | 2019 மற்றும் 2020 ஆண்டுகளில் போது சபையினால் மேற்கொள்ளப்பட்ட செலவுகளை மீளளிப்பு செய்வதற்காக 04 நிறுவனங்களில் இருந்து வழங்கியிருந்த ரூபா 1,035,000 தொகை செலவு மீளளிப்பு என கணக்கீடு செய்யாமல் வைப்புக்கள் என காட்டப்பட்டுள்ளன. | செலவு மீளளிப்புக்கள் என கிடைத்திருந்த அனைத்து பணமும் வருமானத்துக்கு எடுத்து அபிவிருத்தி வேலைகளுக்காக ஈடுபடுத்துகின்றேன். | செலவு மீளளிப்புக்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டின் போது சபைக்கு சொந்தமான 04 காணிகளை அபிவிருத்தி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 529,579 தொகை மூலதனச் செலவுகள் காணி மற்றும் கட்டிடங்களின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | மூலதனச் செலவுகள் குறிப்பிட்ட சொத்துகள் கணக்கின் கீழ் மூலதனப்படுத்த வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 499,512,489 தொகைக்கான 12 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய துணைப்பதிவேடுகள்/ அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகள் இடையே ரூபா 2,987,332 இற்கான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | உரிய மீதிகளின் வித்தியாசங்களை இணக்கம் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுத்தொகை ரூபா 534,039,014 தொகைக்கான 08 கணக்கு விடயங்கள் தொடர்பாக கணக்காய்விற்குத் தேவையான தகவல்கள் சமர்ப்பித்திருக்கவில்லை. | விரிவான அட்டவணைகள் மற்றும் காலப்பகுப்பாய்வு தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 11,240,704 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 27,595,351 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரியும் வரியும்** | | |
| i. | பெற வேண்டிய வீதவரி ரூபா 5,030,480 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அறவீடு செய்வதற்கு அறிவுரை மற்றும் மாதாந்த முன்னேற்றம் நிதி மற்றும் கொள்கைக் குழுவுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| ii. | பெற வேண்டிய வியாபார வரி ரூபா 313,050 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பேன். | - மேற்படி - |
| iii. | பெற வேண்டிய ஏக்கர் வரி ரூபா 29,832 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கணிப்பீடு ஒன்று மேற்கொண்டு பதிவேடுகளை சரி செய்வதற்கும், நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுப்பேன். | - மேற்படி - |
| **(ஆ)** | **வாடகை** | | |
| i. | பெற வேண்டிய கடை வாடகை ரூபா 128,264 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மீதித் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | - மேற்படி - |
| ii. | சபைக்கு சொந்தமான சந்தையை குத்தகைக்கு கொடுப்பதன் மூலம் பெறவேண்டியிருந்த ரூபா 5,138,146 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | - மேற்படி - |
| **(இ)** | **அனுமதிப்பத்திரக் கட்டணம்** | | |
| | பெற வேண்டிய அனுமதிப் பத்திரக் கட்டணம் ரூபா 25,550 தொகையை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |

**(ஈ) நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| | | |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள் முறையே ரூபா 672,778 தொகை மற்றும் ரூபா 28,262,648 தொகை ஆகும். | நிலுவையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | - மேற்படி - |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1982 இன் 4 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபை திருத்திய சட்டம் மற்றும் அதி விஷேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் அதற்கு மேற்கொண்டிருந்த திருத்தங்களின் பிரகாரம் இணக்கச் சான்றிதழ் இன்றி வதிதல்/ பாவணை செய்தல்/ பயன்படுத்துதல் மீது ஒரு நாளைக்கு ரூபா 50 வீதம் ரூபா 614,940 இற்கான தண்டப் பணம் ஒன்று 10 கட்டிட அபிவிருத்தி வரைபுகளில் இருந்து அறவீடு செய்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் இவ்வாறான விண்ணப்பங்கள் தொடர்பாக செயற்படும் போது உரிய சட்டம் அதனோடு தொடர்புடைய வர்த்தமானி அறிவித்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பேன். | சட்டம் மற்றும் வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நடாத்தப்பட்டு வருகின்ற 05 வியாபார நிலையங்களில் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தின் செல்லுபடியாகும் காலத்தை பரிசோதனை மேற்கொள்ளாமல் வியாபார அனுமதிப்பத்திரம் வழங்கியிருந்ததுடன் குறிப்பிட்ட கைத்தொழில்கள் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கு ஊக்குவிப்பதற்காக சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொண்டிருக்காத வியாபார நிலையங்களுக்கு அந்த அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளும் படி அறிவிப்பேன். | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.3 விளைவற்ற அல்லது குறைபயன்பாட்டு ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபைக்கு சொந்தமான 546.8 பர்சஸ்களைக் கொண்ட 7 காணிகள் ஆக்கபூர்வமான விடயங்களுக்கு ஈடுபடுத்தாமல் மீளாய்வாண்டு ஆரம்பம் வரை விளைவற்றுக் காணப்பட்டது. மேலும் மீளாய்வாண்டிற்கான நிலையான சொத்துக்கள் கணிப்பீட்டு அறிக்கையின் படி அறுதியாக இனங்கண்டிருக்காத 1370 பர்சஸ் கொண்ட 10 காணிகள் காணப்பட்டது. | ஆதனங்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் பயிர் செய்யக் கூடிய காணிகளை பயிர் செய்வதற்கான செயற்திட்டம் ஒன்றினை செயற்படுத்துகின்றேன். | சபைக்கு சொந்தமான காணிகை ஆக்கபூர்வமான கருமங்களுக்கு ஈடுபடுத்த வேண்டும். |

## 3.4 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பெறுகை வழிகாட்டல் கோவையின் 3.4.3 (இ) பிரகாரம் வரையறுக்கப்பட்ட கூறுவிலைகள் அழைக்கும் போது பதிவு செய்யப்பட்ட வழங்குனர்களுக்கு மாத்திரம் சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், பதிவு செய்யப்பட்டிருக்காத மூன்று வழங்குனர்களிடம் கூறுவிலைகள் அழைக்கப்பட்டு கூட்டுத்தொகை ரூபா 506,000 பெறுமதியான 12 டயர்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | கொவிட் தொற்றுநோய் நிலைமை மற்றும் பதிவு செய்யப்பட்ட வழங்குனர்கள் மாவட்டத்துக்கு வெளியே இருத்தல் காரணமாக திறந்திருந்த நிறுவனத்தில் இருந்து கொள்வனவு செய்யப்பட்டது. | பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |